டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.07.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 032 - Madurai | Online Edition

# பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் திட்டம்

புது தில்லி, ஜுலை 24

நாட்டில் பருத்தி உற்பத்தி கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்து வருகிறது. 2020-21-ம் ஆண்டில் 352.48 லட்சம் பேல்களாக இருந்த உற்பத்தி 2025-26-ம் ஆண்டில் 290.91 பேல்களாக குறைந்தது.

உற்பத்தியில் ஏற்பட்ட இந்த மாறுபாட்டிற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. விவசாயிகள் மாற்றுப் பயிர்களுக்கு மாறியதால் பருத்தி சாகுபடிப் பரப்புக் குறைந்து உற்பத்தியும் சரிந்துள்ளது.

சர்வதேச அளவில் பருத்தி விலை சுமார் 19% வரை அதிகரித்து உள்ளது. தேவையைப் பூர்த்திச் செய்ய கச்சாப் பருத்தியும், பருத்தி நூலும் இறக்குமதி செய்யப்படுகிறது. ஜவுளித் தொழிலுக்கு ஆதரவளிக்கும் விதமாக 31.10.2026 வரை பருத்தி இறக்குமதி மீதான 11% வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பருத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் அதன் தரத்தை மேம்படுத்தவும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு நிதியாண்டு முதல் 2030-31-ம் நிதியாண்டு வரை 5 ஆண்டுகளுக்கு 5,659.22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் பபித்ரா மார்கரிட்டா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கருத்து காட்சி அரங்கு

## மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்

சேலம், ஜூலை 24

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் சார்பாக அமைக்கப்பட்ட கருத்து காட்சி அரங்கினை மாவட்ட ஆட்சியர் K.இளம்பகவத், பார்வையிட்டார்.



இக்கருத்து காட்சி அரங்கில் உயிர்மச்சான்று பெறுவதற்கான வழிமுறைகள், ஆடி பட்டத்திற்கு ஏற்ற நெல் விதைகள், சோளம், இராகி, கொள்ளு, பச்சைபயறு மற்றும் நிலக்கடலை உள்ளிட்ட உயர் விளைச்சல் ரகங்கள் காட்சிப் படுத்தப்பட்டது. மேலும், விதை பரிசோதனை நிலையம் சார்பாக முளைப்புத் திறன் பரிசோதனை முறைகளான மணல் விதைப்பு, மடிப்புத் தாள் விதைப்பு, சுருள் தாள் விதைப்பு காட்சிப்படுத்தப் பட்டது. இதனை, ஏராளமான விவசாயிகள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வே)/ வேளாண்மை துணை இயக்குநர் ந.கமலம், விதை ஆய்வு துணை இயக்குநர் க.சித்ரா, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அ.நவநீத கிருஷ்ணன், விதை பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா, விதைச்சான்று அலுவலர்கள் ப.கௌரிசங்கர் மற்றும் மணிமொழி வேளாண் அலுவலர்கள் (விதை பரிசோதனை நிலையைம்) பெ.கவிதா மற்றும் மு.நத்தினி, விதை ஆய்வாளர் பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ரோவர் வேளாண்மை கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்

பெரம்பலூர், ஜூலை 24

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 24.07.26 வெள்ளிக்கிழமை அன்று இறுதியாண்டு வேளாண்மை மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. ரோவர் கல்விக் குழும மேலாண் தலைவர் முனைவர் வரதராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார்.




அடாமா இந்தியா பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமில் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு, நிறுவனத்தின் தேர்வு முறைகளில் பங்கேற்றனர். தகுதியான மாணவர்கள் நிறுவனத்தின் பல்வேறு பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன் மற்றும் இயக்குநர் முனைவர் வஹாப் ஆகியோர் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி, தனியார் துறையில் உள்ள வேலைவாய்ப்புகளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினர். கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் பரமேஸ்வரி, வேலை வாய்ப்பு முகாமை ஒருங்கிணைத்தார்.

நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# செயல்விளக்கத்திடல் ஆய்வு மற்றும் மின்னனு பயிர் சாகுபடி கணக்கீடு குறித்து வேளாண்மை துணை இயக்குநர் தகவல்



சிவகங்கை, ஜுலை 24

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் மூலமாக மேலாயூர் கிராமத்தில் 23.07.26 அன்று செல்வம் (வேளாண்மை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம்), அட்மா திட்டம் மூலமாக வழங்கியுள்ள காய்கறி அறுவடை கருவிகள் பயன்பாடுகள் குறித்த செயல்விளக்கத் திடல் ஆய்வு பணி மேற்கொண்டார். இளையான்குடி வட்டார விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கினார்.

மேலும் மின்னனு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு குறித்து விவசாயிகளின் பயிர் விவரங்கள் நேரடியாக களத்திற்கு சென்று சேகரிக்கும் பணியாகும்.

இக்கணக்கெடுப்பு பணியானது காரீப், இராபி மற்றும் கோடை என வருடத்திற்க்கு மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆய்வின் போது பயனாளி விவசாயி சுந்தராஜன் கூறுகையில், அதிக லாபம் தரும் கத்தரிக்காய் ஆண்டு முழுவதும் தேவைப் படும் ஒரு காய்கறி என்பதால் சந்தையில் எப்போதும் இதற்கு நல்ல வரவேற்பு மற்றும் நிலையான விலை கிடைக்கிறது. மேலும், விவசாயி கூறுகையில் அறுவடை முறைகள் கூறுகையில், சரியான நேரத்தில் அறுவடை செய்வது காயின் தரத்தையும் சந்தை மதிப்பையும் உயர்த்துகிறது. இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன், கத்தரிக்காய் சாகுபடியில் தரமான விதைகள் / நாற்றுக்கள் அடி உரம் மற்றும் உயிர் உரங்கள் ஊடுபயிர் வளர்ப்பு மற்றும் பூச்சி மேலாண்மை சம்பந்தமாக தண்டு மற்றும் காய் துளைப்பான் பூச்சிக்கள் கட்டுபடுத்தும் முறைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

வேளாண்மை அலுவலர் விவசாயிகளுக்கு பசுந்தாள் உரத்தின் முக்கிய பயன்கள் மற்றும் நன்மைகள் கூறுகையில் மண்ணின் வளம் மற்றும் ஊட்டச்சத்து அதிகரிப்பு மற்றும் மண் கட்டமைப்பு மற்றும் நீர்ப்பிடிப்பு திறன் போன்ற பசுந்தாள் உரத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக்கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆய்விற்க்கான ஏற்பாடுகளை கோகிலா மற்றும் சதீஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் கௌசல்யா மின்னனு பயிர் கணக்கெடுப்பு பணியில் பதிவுகள் மேற்கொண்டார்.

# தோவாளை மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கல்வி சுற்றுலா மாணவர்கள் வருகை

கன்னியாகுமரி, ஜுலை 24

தஞ்சாவூரில் உள்ள பிரிஸ்ட் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு வேளாண்மை மாணவர்கள் தோவாளையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் மலரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கல்வி சுற்றுலாவிற்காக 24.07.26 அன்று காலை 11 மணியளவில் வருகை தந்தனர். முனைவர் தி.ராஜ் பிரவின், இணைப் பேராசிரியர் (வேளாண்மை விரிவாக்கம்) மாணவர்களை வரவேற்று அவர்களுக்கு மலர் ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் உயர் கல்வி பணிகளை விளக்கி கூறினார்.

சுமார் இருபது மாணவர்கள் மற்றும் மூன்று உதவி பேராசிரியர்களான சி.சர்மிதா (உழவியல்), க.கவிகுயிலன் (பூச்சியல்) மற்றும் மு.நூதன் பிரியா (தோட்டக் கலை) கலந்து கொண்டு கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பின் மாணவர்கள் மலர் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளக பிலர் பல்லுயிர் பூங்காவை சுற்றி பார்த்தனர். இறுதியாக மாணவ பிரதிநிதி Ð.ஈதிஷ் நன்றியுரை வழங்கினார்.



# தரமற்ற அரசு அனுமதி பெறாத உரம் விற்பனை செய்தால் உரிமம் உடனடியாக ரத்து

## வேளாண்மை துறை எச்சரிக்கை



பெரம்பலூர், ஜூலை 24

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரையின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தனியார் உர விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது அவர் கூறியதாவது, உரம் உரிமை பெற்ற சில்லறை விற்பனையாளர்கள், கண்டிப்பாக அரசு அனுமதி பெறாத உரம் விற்பனை செய்வது மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் வாங்கிய உரம் வேறு மாவட்டத்திற்கு, கடத்தப்பட்டால் உடனடியாக உரம் உரிமம் ரத்து செய்யப்பட்டு, உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985-இன் படியும், அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 இன் படியும், உடனடியாக நீதிமன்றம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

உர விற்பனையாளர்கள் அத்தியாவாசிமாக கடைப்பிடிக்க வேண்டியவை பற்றி கூறுகையில், சில்லறை உரம் விற்பனையாளர்கள், மொத்த உரம் விற்பனையாளர்களிடம் உரம் வாங்கும் போது, அனுமதி பெற்ற விற்பனை நிலையத்துக்கு இன்வாய் உடன் வாங்கும்போது இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள விற்பனை நிலையத்தில் மட்டுமே உரங்களை இருப்பு வைக்க வேண்டும், வேறு ஒரு உரிமம் பெற்ற நிலையத்தில் இருப்பு வைத்திருந்தால் அது தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி மீறிய செயலாகும். இப்படி இருப்பதை அறியப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும்.

அனைத்து உரம் விற்பனையாளர்களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பி.ஓ.எஸ். பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். உரங்கள் விற்பனை செய்யும்போது விற்பனை பில் முகவரி மற்றும் தொலைபேசி நம்பர் இல்லாமல் விற்பனை செய்யப்படுவது, அனுமதி பெறாத இடத்தில் உரம் இருப்பு வைப்பது,

விற்பனை விலைப் பலகை பராமரிக்காமல் இருப்பது அறிந்தால், உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். சில்லரை உரம் விற்பனையாளர்கள் விற்பனை நிலையத்தில் இருப்பு பதிவேடு இருப்பு, பி.ஓ.எஸ். இயந்திரத்தின் இருப்பு, உண்மை இருப்பு உரங்கள் எப்போதும் சரியாக வைத்திருக்க வேண்டும். விற்பனையில் கண்டிப்பாக விவசாய முகவரி இல்லாமல் விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை நிலையத்தில் உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடக்கவில்லை என்றால், ஆய்வின் போது உரிய நடவடிக்கை எடுத்து உரம் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# ஆடிப்பட்டம் காய்கறித் தோட்டம்

வேளாண்மையில் பட்டம் (பருவம்) மிக மிக முக்கியமானது. அதனால் தான் விவசாயிகள் மத்தியில் 'பட்டம் தப்பினால் நட்டம்' என்று ஒரு சொலவடை உண்டு. விவசாயம் செழித்து வளர மார்கழிப்பட்டம், சித்திரைப்பட்டம், மாசிப்பட்டம் என பல பட்டங்கள் இருந்தாலும் மானாவாரிப் பயிர் சாகுபடிக்கும், வீட்டுத் தோட் டத்தில் 'பயிர்க்குழி' என்றழைக்கப்படும் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்கும் உகந்து ஆடிப்பட்டமாகும். ஆடிப்பட்டத்தில் குறிப்பாக ஆடி 18-ஆம் நாளன்று விதைப்பு செய்வது சாலச் சிறந்ததாகும். இவ்வாறு ஆடி 18-ல் விதைக்கப்படும் பயிர்குழி - பயிர்களான சுரைக்காய், புடலங்காய் போன்றவை நன்கு செழித்து வளர்ந்து, பூத்து காய்த்து நல்ல மகசூல் கொடுக்கும்.

## பயிர்க்குழி அமைக்கும் முறை

விதை விதைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக நமது வீட்டைச் சுற்றி இருக்கின்ற காலியிடங்களில் 1 1/2 அடி ஆழம், 1 1/2 அடி அகலம், 1 1/2 அடி நீளம் என்ற அளவில் குழிகள் தோண்டி, ஒரு வாரத்திற்கு குழிகளை வெயில் படும்படி காயவிட வேண்டும். ஒரு குழிக்கும் இன்னொரு குழிக்குமான இடைவெளி பயிரின் வளரும் தன்மையைப் பொறுத்து 3 அடி முதல் 10 அடி வரை இருக்குமாறு குழிகள் தோண்ட வேண்டும். பூசணிக்காய், சுழரைக்காய், பீர்க்கங்காய் போன்ற கொடிவகைப் பயிர்களுக்கு அதிக இடைவெளியும், செடி அவரை, கொத்தவரை, வெண்டை, முள்ளாங்கி, பீட்ரூட் போன்ற குத்துச்செடி வகைகளுக்கு குழிக்குக்குழி 3 அடி இடைவெளியும் இருக்குமாறு குழிகள் வெட்ட வேண்டும்.

## குழிகளை நிரப்புதல்

தோண்டப்பட்ட குழிகளில் நன்கு மக்கிய தொழுஉரம் அல்லது மண்புழு உரம், செம்மண் அல்லது மணல், குழியில் தோண்டப்பட்ட காய்ந்த மேல் மண் ஆகியவற்றை சரிசமமாக 1:1:1 என்ற விகிதத்தில் கலந்து குழியின் ஆழத்தில் 3ல் 2 பங்கு அதாவது 1 அடி உயரம் வரை நிரப்ப வேண்டும். இக்குழியில் குழி ஒன்றுக்கு 250 கிராம் வீதம் வேப்பம் புண்ணாக்கு தூள் அல்லது இடிக்கப்பட்ட வேப்பம் விதைத்தூள் ஆகியவற்றை தூவி மண்ணுடன் நன்கு கலந்து விட வேண்டும்.

மேலும் இக்குழிகளில் வளரும் செடிகளுக்கு தேவையான நைட்ரஜன் சத்தினை காற்றிலிருந்து மண்ணில் கரையாத நிலையில் உள்ள பாஸ்பரஸ் சத்தினை கரைத்து பயிர்களுக்கு கொடுப்பதற்கும், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டிரியா போன்ற நுண்ணுயிர் கலவையினை குழி ஒன்றுக்கு 50 கிராம் வீதம் நன்கு மக்கிய தொழுஉரம் / மண்புழு உரத்துடன் கலந்து குழியில் தூவி மண்ணுடன் நன்கு கலந்து விட வேண்டும்.

**விதை விதைப்பு செய்தல்**

தயார் நிலையில் உள்ள பயிர்க்குழிகளில் ஒவ்வொரு குழிக்கும் ஒரு பயிர் வீதம் விதைப்பு செய்ய வேண்டும். விதைப்பு செய்வதற்கு பாரம்பரிய ரக காய்கறி விதைகளையோ அல்லது மேம்படுத்தப்பட்ட ரக விதைகளையோ அல்லது வீரிய ஒட்டுரக விதைகளையோ பயன்படுத்தலாம்.

ஒரு குழிக்கு 10 முதல் 20 விதைகள் விதைப்பு செய்ய வேண்டும். விதைத்த விதைகள் முளைத்து வந்தபிறகு 15 ஆம் நாள் நன்றாக செழித்து வளர்ந்து உள்ள ஆரோக்கியமான செடிகளை விட்டு விட்டு அதிகப்படியாக முளைத்துள்ள செடிகளை களைந்து விட வேண்டும்.

செடிக்குச் செடி போதிய இடைவெளி இருந்தால்தான் நன்கு வளர்ந்து மகசூல் கொடுக்கும்.



**நீர்ப் பாசனம்**

விதைகள் நடவு செய்த உடன் நீர் பாய்ச்ச வேண்டும். விதைப்பு செய்த 3 ஆம் நாள் (உயிர்த் தண்ணீர்) மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பிறகு மண்ணின் தன்மைக்கேற்ப 4 முதல் 7 நாட்களுக்கொருமுறை நீர்பாய்ச்ச வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

பயிர்கள் நன்கு வளர்ந்து, பூத்து காய்த்து மகசூல் கொடுக்கும் வேளையில், பூச்சித் தாக்குதல் தென்பட்டால் 5% வேப்பங் கொட்டைக் கரைசல் அல்லது 2% வேப்ப எண்ணெய்க் கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**பயிர்க்குழி விவசாயத்தின் நன்மைகள்**

- குறைந்த செலவில் நிறைந்த மகசூல் அறுவடை செய்யலாம்.
- நஞ்சில்லாத இயற்கை உணவு உற்பத்தி செய்யலாம்.
- மனதிற்கு மகிழ்வூட்டும் பொழுது போக்குகாக பயன்படுத்த லாம்.
- குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் கூடிய அறிவு வளர்ச்சி பயிற்சியாக செயல்முறைப்படுத்தலாம்.
- சத்துக்கள் விரையமாகாமல் பறித்தவுடன் சமைக்கலாம்.
- சுற்றுச்சூழல் உணவுச்சங்கிலி இயற்கை வேளாண்மை போன்ற நல்ல வியங்களை கற்றுக் கொள்ளலாம்.

எனவே விவசாயிகள், வேளாண் விதை உற்பத்தியாளர், வேளாண் விதை விற்பனையாளர் தங்களிடம் உள்ள விதை களை மதுரை நாகமலை புதுக்கோட்டையில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- வீதம் செலுத்தி, விதையின் தரத்தை பரிசோதனை செய்து கொள்ளுமாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண் அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவிக்கின்றனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID
BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# எல்-நினோ பாதிப்பால் கொதிக்கும் வெப்பம் - தடம் மாறும் விவசாயம்



உலகளவிய வானிலை மாற்றங்களில் மிக முக்கிய பங்காற்றும் எல்நினோ நிகழ்வு தற்போதைய சூழலில் சர்வதேச அளவிலும் இந்திய அளவிலும் பெரும் கவலைகளை ஏற்படுத்தி வருகிறது. எல்– நினோ என்பது பசிபிக் பெருங்கடலில் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலவும் கடல் மேற்பரப்பு நீரின் வழக்கத்திற்கு மாறான வெப்ப மயமாதலே தான்.

**எல்நினோ பாதிப்பு?**

பருவ மழையை மட்டும் பிரதானமாக நம்பி இருக்கும் இந்திய துணை கண்டத்தில் விவசாயத் துறைக்கு எல்நினோ எப்போதும் ஒரு சவாலான கால கட்டமாகவே பார்க்கப்படுகிறது.

**சாகுபடி வீழ்ச்சி?**

பொதுவாக மழை தள்ளிப் போகும் போதும், ஒட்டு மொத்த சாகுபடி சுழற்சியும் நிலை தடுமாறுகிறது. வழக்கமாக ஜூன்–ஜூலை மாதங்களில் சுறுசுறுப்பாக நடைபெறும் சாகுபடி பணிகளான விதைப்பு, நடவு போன்ற சாகுபடி பணிகள் போதிய நீர்ப்பாசன இல்லாததால் இந்த ஆண்டு சாகுபடி தள்ளிப்போய் விட்டதாக தரவுகள் உள்ளன. ஒரு சில இடங்களில் போர்வெல் தண்ணியை வைத்து நட்ட பயிர்களும் அவற்றின் வளர்ச்சி பருவங்களில் நீரின்றி கருகி இடும் நிலை தான் எங்கும் உள்ளது. இதனால் மகசூல் பெரும் விழ்ச்சியாக இருக்கும்.

**உற்பத்தி செலவு சாகுபடி செலவு அதிகம்?**

நெருக்கடியான இக்கால கட்டத்தில் விவசாயத்தை எவ்வாறாவது காப்பற்றி விட வேண்டும் என்ற நோக்கில் விவசாயிகளின் முதலீட்டு செலவு பன் மடங்காக உயர்கிறது.

கூடுதலான மின்சார செலவு உர செலவும் அதிகரித்து வருகின்றன. இதனால் உழவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற பழமொழி தான் ஞாபகத்திற்கு வருகின்றன. நாட்டின் உணவுப் பண வீக்கம் அதிகரித்து, நுகர்வோரையும் நாட்டின் பொருளாதார த்தையும் நேரடியாக பாதிக்கும்.

**பூச்சிகளின் பெருக்கம்**


வறண்ட வெப்ப நிலையில் பூச்சிகளின் பெருக்கம் அதிகமாவதுடன் (மாவு பூச்சி, வெள்ளை ஈ) அதனை கட்டுப்படுத்த அதிக செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது மட்டுமா வெப்ப அலையின் தாக்கத்தால் கால்நடைகளில் உடல்ரீதியான பாதிப்பு ஏற்படுவதுடன் பால் உற்பத்தியும் கணிசமாக குறையும்.

**எல்நினோ தாக்கத்தை குறைக்க?**

இதனை முற்றிலுமாக தடுக்க முடியாவிட்டாலும் முறையான திட்டமிடல் மூலம் இதனுடைய தாக்கத்தை குறைக்க முடியும். பாரம்பரிய நீர் மேலாண்மை முறைக்கு பதிலாக சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறைகளை கையாள வேண்டும். அதிக நீர் தேவையுள்ள நெல், கரும்புக்கு பதிலாக வறட்சியில் விளையும் சிறுதானியங்கள், பயறு வகைகளை பயிர் சுழற்சி-யாக பயிரிடவேண்டும். விதைகளை விதை நேர்த்தி, கடின படுத்துதல் வறட்சியை எதிர்கொள்ளும் தொழில்நுட்பங்களை கையாள வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தென்னை சாகுபடியில் கூடுதல் வருமானம் பெறும் வழிமுறைகளை எடுத்துரைத்த வேளாண் மாணவர்கள்



தேனி, ஜூலை 24

தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செல்லாயிபுரம் கிராமத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழக வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள், கிராமத் தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் களப்பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினர்.

நிகழ்ச்சியின் போது, தென்னை சாகுபடியில் கூடுதல் வருமானம் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு மாணவர்கள் விளக்கமளித்தனர். குறிப்பாக, தென்னை தோட்டங்களில் தேனீ வளர்ப்பின் அவசியம், அதன் மூலம் கிடைக்கும் கூடுதல் வருமான வாய்ப்புகள், தேனீ பெட்டி களை பராமரிக்கும் முறைகள், தேனீக் காலனிகளை (Colony) பாதுகாப்பாகப் பிரிக்கும் (Colony Separation) தொழில்நுட்பங்கள் மற்றும் தேன் உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடி, அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தி மற்றும் வருமானத்தை மேம்படுத்தும் வழிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவர்கள் சாண்டியோ சாஜி, ஆனந்தமரிராஜ், செல்லத்துரை, கஜேந்திரன், வஜில் மற்றும் நந்த கோபால கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர். உதவி பேராசிரியர்கள் முனைவர் சு.கங்காதரன், முனைவர் மு.ஜெயந்தி, வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ் மற்றும் வேளாண்மை அலுவலர் சு.லாவண்யா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி களப்பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

# திருமலைகிரியில் உழவர் திரள் பரவலாக்க நிகழ்ச்சி

சேலம், ஜுலை 24

சேலம் வட்டாரம், திருமலைகிரியில் உழவர் திரள் பரவலாக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர், அருணா, மண் மாதிரி ஆய்வின் அடிப்படையில் சமச்சீர் உர மேலாண் மையை கடைபிடிக்கவும், எல்நினோ வெப்பநிலை, பருவநிலை மாற்றம், இயற்கை பேரிடர் மற்றும் மகசூல் இழப்புகளிலிருந்து பயிரை காத்திட விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திடவும் அறிவுறுத்தினார்.







சிறப்புரை ஆற்றிய சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், வறட்சியை தாங்கி வளரும் குறுகிய கால பயிர்களை தேர்வு செய்து நுண்ணீர் பாசன முறையில் சாகுபடி செய்து நீர் மேலாண்மை முறைகளை கடைபிடிக்குமாறு விவசாயி களிடம் கேட்டுக் கொண்டார்.

சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளுடன் கலந்துரையாடினார். சேலம் வேளாண்மை அலுவலர் ஹனிா, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார். சேலம் தோட்டக்கலை அலுவலர் ஆர்த்தி, தோட்டக்கலைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார். வேளாண்மை பொறியியல் துறையின் உதவிப் பொறியாளர் விமலாரமணி, வேளாண்மை பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார். சித்தர்கோயில் வனவர் செந்தில், வனத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார். உதவி பட்டு ஆய்வாளர் வினித், பட்டுவளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார்.

விதைச்சான்று அலுவலர் செல்வகுமார், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றிப்புத் துறையின் விதைப் பண்ணை பணிகள் செயல்பாடுகள் பற்றி விவசாயிகளுடன் கலந்துரை யாடினார். உதவி வேளாண்மை அலுவலர் விஜயகுமார், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி தெரிவித்தார். பாப்பிரெட்டிப்பட்டி இயற்கை விவசாயி மற்றும் பயிற்றுநர் சஞ்சய் பெருமாள், பாரம்பரிய நெல் இரகங் களை காட்சிப்படுத்தி அவற்றின் நன்மைகள் பற்றி விவசாயி களுக்கு தெரிவித்தார்.

வீரபாண்டி இயற்கை விவசாயி புஷ்பராஜ், இயற்கை விவசாயத்தில் விளைவித்த தேன் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களை காட்சிப்படுத்தி தன் வெற்றியின் அனுபவத்தை பகிர்ந்தார். இந்த நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் இடுபொருட்கள், வேளாண் கருவிகள் டிராக்டர், ட்ரோன், தெளிப்பான்கள் விதைகள் உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு

காரணிகள், நுண்ணூட்ட உரங்கள், சிறுதானியங்கள் கொண்டு வேளாண் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மேலும் கரும்பு வயலுக்கு ட்ரோன் மூலம் மருந்து தெளிக்கும் செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. வறட்சி மேலாண்மை முறைகளை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வறட்சி வேளாண்மை குறித்த விழிப்புணர்வு பேரணியும் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சேலம் வட்டாரத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து 125க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடு களையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ெல்லி ராஜ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.


# இயற்கை வேளாண்மை திருவிழா நடந்தது



கரூர், ஜூலை 24

கரூர் இயற்கை வேளாண்மை திருவிழா கடந்த 19.7.26 அன்று கொங்கு மஹாலில் கலை நிகழ்ச்சியுடன் நடந்தது. விழாவில் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. விழாவில் மதிப்பூட்டப்பட்ட முருங்கை, வாழை பொருட்கள் கண்காட்சியில் இடம் பெற்றன. விழாவில் கிராமிய நடனங்கள் இடம் பெற்றன. விழாவில் பாமயன், சோமசுந்தரம் ஓசை காளிதாசன் காந்தி கிராம துணைவேந்தர், அக்ரி யுவராஜ் தட்சிணாமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழா முடிவில் மண்புழு சுல்தான் இஸ்மாயில் மண்புழுவின் மகத்துவம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தென்னிந்தியாவின் சிக்னேச்சர் தேயிலைக் கண்காட்சி மற்றும் கலந்தாய்வு நிகழ்ச்சி




கோயம்புத்தூர், ஜூலை 24

இந்தியத் தேயிலை வாரியத்தின் குன்னூர் தெற்கு மண்டல அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் ஆகியவை இணைந்து 'தென்னிந்தியாவின் சிக்னேச்சர் தேயிலைக் கண்காட்சி மற்றும் வாங்குபவர்– விற்பனையாளர் இடையேயான கலந்தாய்வு நிகழ்ச்சியை' 24.07.26 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற்றது.

தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பிராந்திய அளவிலான தேயிலைகளின் தனித்துவமான அடையாளம் மற்றும் சிறந்த தரத்தை வெளிப்படுத்துவதோடு, தேயிலை உற்பத்தியாளர் களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே சந்தை இணைப்புகளை உருவாக்குவதற்காக இந்த முயற்சி திட்டமிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கா.சுப்பிரமணியன், தலைமை விருந் தினராகக் கலந்து கொண்டார். இந்தியத் தேயிலை வாரியத்தின் தெற்கு மண்டல அலுவலக (குன்னூர்) செயல் இயக்குநர் எம்.பரணிகுமார், சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர் ஏ.சோமசுந்தரம் வாழ்த்துரையாற்றினார், மேலும் மேற்கு வங்கத்தின் 'சாய்சுன்டீபுட்டிக்' உரிமையாளர் ராஜீவ் பைத், தொழில்நுட்ப அமர்வு மற்றும் வாங்குபவர் – விற்பனையாளர் கலந்தாய்வு அமர்வை நடத்தினார். இக்கண்காட்சியில் நீலகிரி, ஆனைமலை, உயர்மலைப் பகுதிகள், திருவிதாங்கூர், வயநாடு மற்றும் கர்நாடகா உள்ளிட்ட தென்னிந் தியாவின் முக்கிய தேயிலை உற்பத்திப் பகுதிகளைப் பிரதிநிதித்து வப்படுத்தும் முன்னணி தேயிலை பிராண்டுகள் இடம் பெற்றன. சிறு தேயிலை விவசாயிகள் உட்பட சுமார் 110 வாங்குபவர்கள் மற்றும் விற்பனையாளர்கள், 530 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 30 விஞ்ஞானிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பார்வையாளர்கள் தேயிலை உற்பத்தியாளர்களுடன் நேரடியாக உரையாடிய அதேவேளையில், ஒவ்வொரு பகுதியின் தனித்துவ மான சுவை மற்றும் தரமான அம்சங்களை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

கார்பரேட் பிராண்டுகளுடன் போட்டியிடும் வகையில், சிறு தேயிலை விவசாயிகள் அனைவரும் இணைந்து ஒரு புதிய பிராண்டை உருவாக்கி, பரவலான விளம்பரங்களைச் செய்ய முடியும் என்றும், தேயிலையின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் குறித்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர் ஏ.சோமசுந்தரம் சுட்டிக்காட்டினார்.

தலைமை விருந்தினர் உரையாற்றிய போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கா. சுப்பிரமணியன், அன்றாட வாழ்க்கையில் தேயிலையின் பங்கினை வலியுறுத்தியதுடன், தேயிலை மதிப்பு சங்கிலியில் (tea value chain) மாணவர்கள் தங்களது தொழில்முனைவோர் பயணத்தைத் தொடருமாறு ஊக்குவித்தார்.

எம்.பரணிகுமார், பேசுகையில், தென்னிந்தியாவில் உலகின் மிகச்சிறந்த தேயிலை வளரும் பகுதிகள் உள்ளதாகவும், அவை ஒவ்வொன்றும் தனித்துவமான வேளாண்-காலநிலை சூழல், உயரம் மற்றும் சுவையைக் கொண்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். தென்னிந்திய தேயிலைகளின் பன்முகத்தன்மை மற்றும் பாரம் பரியத்தைக் கொண்டாடும் அதேவேளையில், உற்பத்தியாளர்கள், வாங்குபவர்கள், தொழில் முனைவோர், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு ஒரு பொதுவான தளத்தை வழங்குவதே இக்கண்காட்சியின் நோக்கம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேற்குவங்கத்தின் 'சாய்சுன்டீபுட்டிக்' உரிமையாளர் ராஜீவ் பைத், தனது சொந்த வெற்றி கதையைக் கூறி மாணவர்களுக்கு ஊக்கமளித்தார். மாணவர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் தேயிலைத் துறையில் உள்ள வணிக வாய்ப்புகள் குறித்த விவாதங்களில் பங்கேற்றனர்.

வாங்குபவர்-விற்பனையாளர் கலந்தாய்வு அமர்வு, சிறப்புத் தேயிலை சந்தைப்படுத்தல், பிராண்டிங், பேக்கேஜிங் மற்றும் நுகர் வோர் விருப்பங்கள் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங் கியது. தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் சிறுதேயிலை விவ சாயிகள் வாங்குபவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், புதிய சந்தைகளை ஆராயவும், நீண்டகால வணிக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் இது ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது.

இந்நிகழ்ச்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களைத் தேயிலைத் துறையில் தொழில் வாய்ப்புகளை ஆராய ஊக்குவித்தது. கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், மதிப்புக்கூட்டல், தரக்கட்டுப்பாடு மற்றும் தொழில் முனைவோர் திறன் ஆகியவை இந்தியத் தேயிலைத் துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும், இதில் மாணவர்கள் கணிசமான பங்களிப்பை வழங்க முடியும் என்றும் இந்தியத் தேயிலை வாரியம் நம்பிக்கை தெரிவித்தார்.

தேயிலைத் தோட்டச் சங்கங்கள், தேயிலை உற்பத்தியாளர்கள், சிறு தேயிலை விவசாயிகள், வாங்குபவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் தேயிலை ஆர்வலர்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். குன்னூர் இந்தியத் தேயிலை வாரியத்தின் வளர்ச்சி அலுவலர் முனைவர் ஆர்.உமா மகேஸ்வரி மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் பேராசிரியர் முனைவர் ச.முரளிதரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

# சம்பா சாகுபடிக்கு ஏற்ற இரகங்கள்

திருச்சி, ஜுலை 24

திருச்சிராப்பள்ளி விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது,

**ஆடுதுறை – 54**

சம்பா பருவத்தில் அதிக மகசூல் தரக்கூடிய இந்த நெல் இரகம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தால் 2020–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த நெல் இரகம் 130 முதல் 135 நாட்கள் வயதுடையது. சம்பா மற்றும் தாளடி பருவத்தில் பயிரிட ஏற்றது. இந்த நெல் இரகம் வெள்ளைப் பொன்னி மற்றும் பானஸ்கத்தி ஆகிய நெல் இரகங்களை பெற்றோராக கொண்டது. சராசரியாக ஏக்கருக்கு 2,520 கிலோ மகசூல் கொடுக்கக் கூடியது. மத்திய சன்ன அரிசியை தர வல்லது. வெள்ளைப் பொன்னிக்கு இணையான சமையல் பண்புகளை கொண்டது. தண்டுத் துளைப்பான், இலை மடக்குப்புழு, குலை நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது.

**கோ – 56**

சம்பா, பின் சம்பா மற்றும் தாளடி ஆகிய பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்ற ரகம். 2023 ஆண்டு கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி

நிலையத்தால் சாகுபடிக்கு வெளியிடப்பட்டது. 130-135 நாட்கள் வயதுடையது. அதிக தூர் கட்டும் திறன் சாயாத தன்மை உடையது. குலை நோய், பாக்டீரியல் இலைகருகல், இலையுறை அழுகல், இலையுறை கருகல் மற்றும் பழுப்புப் புள்ளி நோய்களுக்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. தண்டுத் துளைப்பான் மற்றும் ஆனைக்கொம்பன் ஆகிய பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புதிறன் உடையது. மத்திய சன்ன அரிசியை தர வல்லது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,550 கிலோ வரை தரக்கூடியது.

**திருச்சி – 3**

2010-ஆம் ஆண்டு திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப் பட்டது. 135 முதல் 140 நாட்கள் வயதுடைய இந்த இரகம் களர், உவர் நிலங்களில் பயிரிட ஏற்றது. சம்பா மற்றும் தாளடி ஆகிய பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்றது. குலை நோய், இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் மற்றும் இலைஉறைகருகல் நோய் களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. இலைசுருட்டுப் புழு, தண்டுத் துளைப்பான் மற்றும் புகையான் பூச்சிகளுக்கு எதிர்ப்புதிறன் உடையது. இட்லிக்கு மிகவும் ஏற்றது. மத்திய பருமன் அரிசியை உடையது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,400 கிலோ வரை தரக்கூடியது.

**சி.ஆர் 1009 சப் – 1**

சம்பா பருவத்தில் ஏற்ற நீண்டகால நெல் இரகம் 2016-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 150 முதல் 155 நாட்கள் வயதுடைய இந்த இரகம் வளர்ச்சி பருவத்தில் வெள்ளத்தை தாங்கி வளரும் தன்மை கொண்டது. குலை நோய், இலைப்புள்ளி நோய், புகை யான் மற்றும் வெண்முதுகு தத்துப் பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புதிறன் கொண்டது. குட்டையான பருமன்அரிசியை கொண்டு அதிக மாவுச்சத்து இருப்பதால் இட்லி செய்வதற்கு மிகவும் ஏற்றது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,300 கிலோ வரை தரக்கூடியது.

**கோ – 50**

மத்திய கால (130-135 நாட்கள்) வயதுடைய கோ-50 நெல் இரகம், கோ-43 இரகத்தையும் ஏடிடீ-38 நெல் இரகத்ததையும் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டது. சிறந்த தாவர பண்புகளை உடைய இந்த நெல் இரகம் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 2,530 கிலோ மகசூல் தரவல்வது. அதிக விளைச்சல் பெறுவதற்கு உகந்த சிறந்த தாவரபண்புகளான சாயாத தன்மை, நடுதத்தர உயரம் (100-120 செ.மீ) அதிக ஒளிசேர்க்கை நடைபெறுவதற்கு தேவையான கரும் பச்சை நிற இலைகள், நன்கு நீண்ட (55 செ.மீ) மற்றும் அகலமான

(2 செ.மீ) இலையை பெற்றிருப்பதுடன் நீளமான செங்குத்தான இலையை உடையது. நீண்ட நெற்கதிரும், ஒரு கதிருக்கு 350 முதல் 360 நெல் மணிகளையும் கொண்டது. இந்த இரகம், பூச்சி நோய் தாக்குதலுக்கு எதிர்ப்பு தன்மை உடையது. குறிப்பாக குருத்து பூச்சி, இலைசுருட்டுப் புழு ஆகிய பூச்சிகளுக்கும், குலை நோய், இலையுறை அழுகல், பாக்டீரியல் இலை கருகல், துங்ரோ ஆகிய நோய்களுக்கும் மிதமான எதிர்ப்புத் திறன் உடையது. மத்திய சன்ன அரிசியைஉடைய இந்த இரகம் நல்ல அரவைத் திறனும் (71.6 சதம்) முழு அரிசி (60 சதம்) காணும் திறனும் உடையது. ஒட்டாத சாதத் தன்மை கொண்டது. சமைப்பதற்கும், இட்லி தயாரிக்கவும் உகந்த இரகமாகும்.

**கோ – 52**

பின் சம்பா மற்றும் தாளடி பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்ற இரகம். 2017ம் ஆண்டு கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தால் சாகுபடிக்காக வெளியிடப்பட்டது. இந்த நெல் இரகம் பி.பீ.டி-5204 மற்றும் கோ-50 ஆகிய நெல் இரகங்களை பெற்றோராக கொண்டது. மத்திய கால இரகம் (130-135 நாட்கள்). புகையான் மற்றும் பச்சை தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. குலை நோய், இலையுறை அழுகல், இலையுறை கருகல் மற்றும் பழுப்புப் புள்ளி நோய்களுக்கு மிதமான எதிர்ப்புதிறன் உடையது. வெள்ளை நிற மத்திய சன்ன அரிசியை தரவல்லது. அதிக அரவைத் திறனும் முழு அரிசி காணும் திறன் உடையது. சராசரி மகசூல் ஏக்கருக்கு 2,475 கிலோ வரை தரக்கூடியது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

சிவகங்கை, ஜூலை 24

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை கீழ் இயங்கி வரும் (அட்மா), மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சிலையாவூரணி கிராமத்தில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் சிலையாவூரணி விவசாயிகள் அனைவரும் வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்த விளம்பர பதாகைகள் ஏந்தி பேரணி நடத்தினார்கள். இக்கூட்டத்திற்கு சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்) கமிலஸ். சி.லீமாரோஸ் தலைமை வகித்து கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை திட்டங்கள், பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி பெற விண்ணபிக்க வேண்டி ஆவணங்கள், தகுதிகள் மத்திய, மாநில அரசு திட்டங்கள், இயற்கை விவசாயம், மண்வள மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை, கால நிலைகேற்ற விவசாய தொழில்நுட்பங்கள், குறைந்த செலவில் அதிக வருமானம் பெறுவதற்கான தொழில் நுட்பங்கள் மற்றும் அனைத்து பயிர்களுக்கும் உற்பத்திதிறன் மேம்பாட்டு காரணிகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். காளையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ப.தைப்பத்துல் ஆசிபா, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும் இடுபொருட்கள் (அசோஸ் பைரில்லம் பாஸ்போபாக்டிரியா, திரவ பொட்டாஷ்) பயன்படுத்தி அனைத்து பயிர்களுக்கும் விதை நேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்த திட்டங்களை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் மதுரை ஆர்.என்.ஆர் (அக்ரிடெவலப்பர்) முனைவர் ந.ராஜேஸ், இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில்நுட்பங்களான அனைத்து பயிர் களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல், இயற்கை யான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடுதல், பசுந்தாள் உரங்கள் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறையில் பயிர் சாகுபடி செய்வது, இலை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவது, உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், கரிம உரங்கள், மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள், பூசாகேப்சூல், வேஸ்ட் டீ கம்போஸ்ட் தயாரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் பேரூட்ட சத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கையான முறையில் இடுவதை பற்றியும் எடுத்து கூறினார்.

துணை தோட்டக்கலை அலுவலர் முத்துக்குமார், தேசிய தோட்டக் கலை இயக்கத்தில் காய்கறி நாற்றுகள், பழக்கன்றுகள், பண்ணை குட்டை அமைத்தல் மற்றும் காய்கறி விதைகள் விநியோகித்தல் போன்ற திட்டங்கள் விவசாயிகளுக்கு வழங்கபடுகிறது என்றும், பிரதம

மந்திரி நுண்ணுயிர் பாசன திட்டத்தில் சொட்டுநீர் பாசனம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நிரந்தர பந்தல் அமைத்தல் போன்ற திட்டங்களை எடுத்து கூறினார். வேளாண்மை பொறியியல் துறையில் உதவி செயற்பொறியாளர் சார்க்கின் விமலா வேளாண் பொறியியல் துறையில் உள்ள திட்டங்களான, வாடகை செயலி பயன்படுத்தி இயந்திரங்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்று கொள்ளும் வழிமுறைகள் மற்றும் இதர திட்டங்களை எடுத்து கூறினார்.

கால்நடை துறையில் கால்நடை உதவி மருத்துவர் அசோக், துறை சார்ந்த திட்டங்களான தேசிய கால்நடை பாதுகாப்பு திட்டத்தில் கோமாரி, கானைநோய் தடுப்புஊசி ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், ஒரு வருடத்திற்கு 2 முறையும் செலுத்த வேண்டும் என்றும், வெறி நோய் தடுப்பு ஊசி திட்டத்தில் இலவச தடுப்பு ஊசி செலுத்தி கொள்ளலாம் என்றும், தேசிய கால்நடை இயக்கத்தில் கால்நடைகளை காப்பீடு செய்தல் மற்றும் தேசிய மின்னணு கால்நடை இயக்கம் – திட்டத்தின் கீழ் ஆடு, மாடு, கோழி வைத்திருப்பவர்கள் தங்களது ஆதார் மற்றும் தொலைபேசி எண்களை கால்நடை துறையில் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் எடுத்து கூறினார். காளையார் கோவில் துணை வேளாண்மை அலுவலர் செந்தில், மண் ஆய்வுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண் ஆய்வு செய்வதன் முக்கியத் துவங்கள் மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள் மற்றும் மண் ஆய்வு செய்வதற்கு அனுப்ப வேண்டிய விபரங்கள் குறித்து எடுத்து கூறினார். மண்வள அட்டை பயன்படுத்தி பயிர்களுக்கு உரமிடுமாறு என்பதனை எடுத்துக்கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி, அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி, கண்டு உணர்வு சுற்றுலா மற்றும் செயல்விளக்கத் திடல்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறினார். நிலங் களில் கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் உயிரி உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், திரவ ரைசோபியம் (பயறு) திரவ பாஸ்போபாக்டீரியா, உபயோகிக்கும் முறைகள் (விதை நேர்த்தி, நாற்று நனைத்தல், நேரடி வயலில் இடுதல், நீர்வழி உரமி டுதல்) பற்றியும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் எடுத்து கூறினார். மேலும் இக்கூட்டத்தில் உதவி வேளாண்மை அலுவலர் பழனியாண்டி, நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்பு திறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன் படுத்தி விதை கடினமாக்குதல் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் காளீஸ்வரி, பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தார்.

# அதிக மகசூலுக்கு சொட்டு நீர்ப்பாசன முறையை அமைப்போம்!

நீர் வளம் நாளுக்கு நாள் குறைந்து வரும் தற்போதைய சூழலில், கிடைக்கக்கூடிய நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது காலத்தின் அவசியமாகியுள்ளது. இந்நிலையில், சொட்டு நீர்ப்பாசன முறை (Drip Irrigation) நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்து, பயிர்களுக்கு தேவையான அளவு நீரை நேரடியாக வேர்ப்பகுதிக்கு வழங்கும் சிறந்த நவீன பாசன முறையாகும். இம்முறையைப் பயன்படுத்து வதன் மூலம் நீர் சேமிப்பு மட்டுமல்லாமல், உரங்களின் பயன் பாட்டுத் திறன் உயர்ந்து, மகசூலும் கணிசமாக அதிகரிக்கிறது.

**சொட்டு நீர்ப்பாசனம் என்றால் என்ன?**

சொட்டு நீர்ப்பாசனம் என்பது குழாய்கள் மற்றும் சொட்டிகள் (Drip-pers) மூலம் பயிர்களின் வேர்ப்பகுதிக்கு தேவையான அளவு நீரை மெதுவாகவும், தொடர்ந்து வழங்கும் பாசன முறையாகும். இந்த முறையில் நீர் நேரடியாக வேர்ப்பகுதிக்கே செல்வதால் நீர் விரயம் முற்றிலும் குறைக்கப்படுகிறது. இம்முறை பழப்பயிர்கள், தென்னை, கரும்பு, பருத்தி, மக்காச்சோளம், காய்கறிப் பயிர்கள், மலர்ப் பயிர்கள் மற்றும் நீண்டகால தோட்டக்கலைப் பயிர்களுக்கு மிகவும் ஏற்றதாகும்.

**சொட்டு நீர்ப்பாசனத்தின் சிறப்பம்சங்கள்**

- பயிர்களுக்கு தேவையான அளவு நீர் மட்டுமே வழங்கப் படுகிறது.
- நீர் நேரடியாக வேர்ப்பகுதிக்கு செல்வதால் ஆவியாதல் மற்றும் ஓட்ட இழப்பு குறைகிறது.
- நீருடன் சேர்த்து உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்து களை வழங்க முடியும்.
- அனைத்து வகை மண்ணிலும் பயன்படுத்தலாம்.
- சரிவான நிலங்கள் மற்றும் மணற்பாங்கான மண்ணிலும் சிறப்பாக செயல்படுகிறது.

**நீர் சேமிப்பு**

பொதுவான மேற்பரப்பு பாசன முறைகளுடன் ஒப்பிடும்போது, சொட்டு நீர்ப்பாசனத்தில் பயிர் வளர்ச்சிக்கு தேவையான பகுதி மட்டுமே ஈரப்படுத்தப்படுகிறது. இதனால் வயலின் சுமார் 30-40% பகுதி மட்டுமே ஈரப்பதமாக இருக்கும். இதன் காரணமாக ஆவியாதல் மற்றும் நீர் ஓட்ட இழப்பு குறைந்து, 50-60% வரை பாசன நீரைச் சேமிக்க முடியும்.

உரங்களின் பயன்பாட்டுத் திறன் சொட்டு நீர்ப்பாசன முறையில் உரப்பாசனம் (Fertigation) மேற்கொள்ள முடியும். அதாவது, நீரில் கரையக்கூடிய உரங்களை வெஞ்சூரி (Venturi) அல்லது உரக் கலவை கருவி மூலம் பாசன நீருடன் கலந்து நேரடியாக வேர்ப் பகுதிக்கு வழங்கலாம்.

**இதன் மூலம் :**

- உரங்களின் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கிறது.
- உரச் செலவு 25% வரை குறைகிறது.
- பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் சரியான நேரத்தில் கிடைக்கின்றன.
- அதிக மகசூல் பெற முடிகிறது.
- களைக் கட்டுப்பாடு

சொட்டு நீர்ப்பாசனத்தில் பயிர்களின் வேர்ப்பகுதி மட்டுமே ஈரப் படுத்தப்படுவதால், வயலின் மற்ற பகுதிகளில் களைகள் அதிகம் வளர்வதில்லை.

**இதனால்**

- களைகளின் வளர்ச்சி குறைகிறது.
- களை எடுக்கும் செலவு குறைகிறது.
- தொழிலாளர் தேவை குறைகிறது.

**சொட்டு நீர்ப்பாசனத்தின் முக்கிய நன்மைகள்**

- 50—60% வரை நீர் சேமிப்பு.
- 25% வரை உரச் செலவு குறைப்பு.
- 25—30% வரை தொழிலாளர் செலவு குறைப்பு.

நீர் பற்றாக்குறை அதிகரித்து வரும் இன்றைய சூழலில், ஒவ்வொரு துளி நீரையும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவது அவசியமாகும். சொட்டு நீர்ப்பாசன முறை நீர், உரம் மற்றும் தொழிலாளர் செலவுகளை கணிசமாகக் குறைத்து, பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் அதிகரிக்கும் தொழில்நுட்பமாகும்.

எனவே, விவசாயிகள் தங்கள் நிலத்தின் தன்மை மற்றும் பயிர்களுக்கு ஏற்றவாறு சொட்டு நீர்ப்பாசன முறையை அமைத்து பயன்படுத்துவதன் மூலம் நிலையான வேளாண்மையையும், அதிக உற்பத்தியையும், உயர்ந்த வருமானத்தையும் பெறலாம்.

மேலும் தகவல்களுக்கு **அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளான, முனைவர் இராமசுப்பிர மணியன் மற்றும் முனைவர் கிருஷ்ணகுமார்** ஆகியோரை அணுகவும்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**